மதிய உணவாக
கோழி பிரியாணி
ருசிமிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
(றிக்கோ)
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள், நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூதா சர்பத்
★ மிக்ஸ் புருட் ஜூஸ்கள்
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 01 சனிக்கிழமை (17 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 294

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும்
அரசின் முயற்சிக்கு இராணுவம் ஆதரவு

அமைச்சர் அனுருத்த தகவல்

கொழும்பு, செப்ரெம்பர் 17

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சியை இராணுவத்தினர் அங்கீகரித்துள்ளனர், ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதனால், அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி இயன்றவரை விரைவில் சமாதானத்தை உருவாக்க எமது அரசு கங்கணம் கட்டியுள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்திருக்கிறார்.

வவுனியா, மணலாறு மற்றும் மன்னார் பகுதிகளில் உள்ள படை முகாம்களுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து, அங்குள்ள சிப்பாய்கள் மத்தியில் பிரதி அமைச்சர் ரத்வத்த மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசின் தலையீடு அவசியம்.

அத்தலையீடு தற்சமயம் நியாயமான முறையில் இடம்பெறுவதாக இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி இயன்றளவு விரைவில் சமாதானத்தை உருவாக்க எமது அரசு கங்கணம் கட்டியிருக்கிறது.

பேச்சுவார்த்தையை இழுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

மண்எண்ணெய் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், செப், 17

மாஹோ கப்பலில் 8 ஆயிரம் டரம் மண்எண்ணெயும் எடுத்து வரப்பட்டுள்ளது.

ஒரு தொகுதி சீமெந்து, தேங்காய் எண்ணெய், அஸ்பெஸ்டஸ் கூரை, பைப்புகள், பிளைவூட் பலகை மற்றும் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பனவும் அந்தக் கப்பலில் வந்துள்ளன.

செய்தியாளர் குழுவினர்
யாழ்ப்பாணம் படை எடுப்பு

வடமராட்சி, செப். 17

இந்தியா உட்பட வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த ஆறுபேர் அடங்கிய செய்தியாளர் குழுவினர் நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்.

ஏ. எவ். பி, செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அமல் ஜெயசிங்கா, படப்பிடிப்பாளர் சேன விதானகம,—

யு. என். ஐ. செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் திரு. பி. ஜெயராம், பி. ரி. ஐ. செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. விஜய் சடோகர் —

இந்து பத்திரிகையின் கொழும்பு சிறப்புச் செய்தியாளர் திரு. வி. ஜயந், 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளர் திரு. சப்ரரிம் முகர்ஜி ஆகியோரே இங்கு வந்துள்ளனர்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்த இவர்கள் பின் அங்கிருந்து "மாஹோ" கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர்

(ஐ-8-178)

யாழ்.மாவட்ட
மக்கள் வங்கிக் கிளைகளில் 20 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், செ. 17

யாழ் மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளுக்கு புதிதாக 20 எழுதுவினைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாக கொழும்பிலிருந்து நேற்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மக்கள் வங்கிக் கிளைகளில் எழுதுவினைஞர்களை சேர்த்துக் கொள்வதற்காக அண்மையில் யாழ்ப்பாணத்தில் போட்டிப்பரீட்சை நடைபெற்றது.

இப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கான நியமனக் கடிதங்களே அனுப்பிவைக்கப்படவுள்ளன. (இ-4)

வடக்கு – கிழக்கில் உள்ள ராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டா!

கொழும்பு, செப். 17

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற்றாலும் வடக்கு — கிழக்கில் உள்ள ராணுவ முகாம்கள் அகற்றப்பட மாட்டா.

வவுனியா, தாண்டிக்குளத்தில் படையினரின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற்றால் வடபகுதியில் உள்ள ராணுவ முகாம்கள் அகற்றப்படுமா? என்ற கேள்விக்கே பிரதி அமைச்சர் முன்கண்டவாறு பதில் அளித்தார்.

நாட்டின் சகல இடங்களிலும் ராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலும் அவை அமைந்துள்ளன.

தற்போதுள்ள முகாம்கள் எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டா என்றும் பிரதி அமைச்சர் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் போது விடுதலைப்புலிகள் ஆயுதங்களைச் சேகரித்து மீண்டும் எங்களை தாக்கலாம் என்று இராணுவத்தினர் கருத்து வெளியிட்டனர்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் "இதுபோன்ற சம்பவங்கள் நிகழ நாம் இடமளிக்க மாட்டோம். நாங்கள் காட்டிக் கொடுப்பவர்கள் அல்லர்" என்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும்போது தமது கடமைகளை இராணுவத்தினர் உரியமுறையில் நிறைவேற்ற வேண்டும். கடந்தகாலங்களைப் போன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது. சகல விவரங்களும் மக்கள் முன் வைக்கப்படும். பேச்சுவார்த்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

தெற்கில் வெள்ளம்

கொழும்பு, செப் 17

தென் பகுதியில் பலத்த மழை பெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது

நில்வளகங்கை, ஜின் கங்கை ஆகியவற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ 4)

படையினர் தாக்குதல் மீனவர் காயம்!

பொன்னாலை, தருத்திப்பிட்டி கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரம் பெரிய புலோலைச் சேர்ந்த தம்பையா செல்வராசா (வயது 33) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-13)

மணலாற்றில் மீனவர் படகு படையினரால் மூழ்கடிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

மணலாறு கடற்பரப்பில் மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மீனவரின் படகு ஒன்று கடலில் மூழ்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கரையை நோக்கி வந்த கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகொன்று இத்தாக்குதலால் சேதமாகி கடலில் மூழ்கியது.

படகில் நின்ற மீனவர் கடலில் குதித்ததால் உயிர் தப்பினார். கடற்படையினரின் தாக்குதலை அடுத்து மீனவர்கள் தமது தொழிலை தொடர முடியாது கரை திரும்பினர். (இ-4)

லண்டன் மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை

லண்டன், செப். 17

இன்றும் நாளையும் லண்டனில் சர்வதேச சுகாதார மாநாடு நடைபெற உள்ளது.

இலங்கையின் வடக்கு — கிழக்கு பகுதி மக்கள் படும் துன்ப துயரங்களை சர்வதேசமும் அறியும் நோக்குடனேயே லண்டனில் சர்வதேச சுகாதார மாநாடு கூட்டப்படுவதாக மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

பேச்சில் பங்குபற்ற ந.ச.ச.க. விருப்பம்

கொழும்பு செப். 17

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்தும்போது நவ சமசமாஜக் கட்சியையும் பேச்சுக்கு அழைக்குமாறு பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவிடம் அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதில் கட்சி அக்கறை கொண்டுள்ளது என்றும் —

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையில் ஒரு பகுதியை அரசு நீக்கியதை கட்சி பாராட்டுவதாகவும் — அந்தத் தடையை முழுமையாக நீக்க வேண்டும் என்றும் — நவ சமசமாஜக் கட்சி பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் படையினர் இருவர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் — நெடுஞ்சேனை எனும் இடத்தில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன (இ-9)

விபத்தில் காயமடைந்த பெண் மரணம்

தலையில் ஏற்பட்ட காயத்துடன் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த குமாரசாமி அன்னப்பிள்ளை (வயது 60) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார்.

நேற்று முன்தினம் அப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

மாஹோவில் தபால் பொதிகள்

நேற்றுப் பருத்தித்துறையை வந்தடைந்த "மாஹோ" கப்பலில் 415 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டு மறுநாளே அவை விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். [ஐ-3-4-173]

டாக்டர் பொன்னம்பலம் காலமானார்

யாழ்ப்பாணம், செப். 17

பிரபல சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் சுப்பிரமணியம் பொன்னம்பலம் கொழும்பில் நேற்றுக் காலமானார்.

டாக்டர் பொன்னம்பலம் யாழ். போதனா வைத்திய சாலையின் சிரேஷ்ட வைத்திய நிபுணராவார். 1977 ஆம் ஆண்டு முதல் யாழ் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சத்திர சிகிச்சை நிபுணராகப் பணிபுரிந்த இவர் நோயாளர்களின் நன்மதிப்பைப் பெற்றார்

கரம்பனை பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் பொன்னம்பலத்துக்கு வயது 66 ஆகும். சாஸ்திரிய சங்கீதத்தை முறைப்படி பயின்ற இவர் புல்லாங்குழல் இசைப்பதில் வல்லவர்.

டாக்டரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-4]

வடக்கே பற்றறி எடுத்துவர விதிக்கப்பட்ட தடை தளர்வு

பாதுகாப்பு பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, செப். 17

வடபகுதிக்கு பற்றறிகளை எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இது பற்றி அறிவித்துள்ளார் என ரூபவாஹினி நேற்று மாலை தெரிவித்தது.

ஆயினும் பென்ரோச் பற்றறிகள் மீதான தடை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த —

தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து வடபகுதி மக்கள் பற்றறிகளை எடுத்துச் செல்ல முடியாது கஷ்டப்படுவதை நேரில் அவதானித்தார் என்றும் —

பற்றறிகளை வட பகுதிக்கு எடுத்துச் செல்ல மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அப்போது அவர் அங்கிருந்த இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறினார் என்றும் —

அதன் பின்னர் வடபகுதி மக்கள் பற்றறிகளை தம்முடன் எடுத்துச் சென்றதை பத்திரிகையாளர்கள் நேரில் கண்டனர் எனவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

பற்றறி மீது அரசு விதித்திருந்த தடை விடுதலைப் புலிகளை எந்த வகையிலும் பாதிக்கவில்லை என்று இராணுவத்தினரும், சில தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களும் கூறிவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது (ஐ-எ 6 4)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப் 17

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

தியாகி திலீபனுக்கு நேற்று 2 ஆம் நாளாக மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 17

ஈகைச் சாவடைந்த தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் குடாநாட்டில் உணர்வுபூர்வமாக இடம்பெற்று வருகின்றன.

இரண்டாவது நாளான நேற்று கோட்ட ரீதியாக அமைக்கப்பட்ட பந்தல்களில் அடையாள உண்ணாவிரதங்களில் மக்கள் பங்குபற்றினர். உண்ணாவிரத நிகழ்வைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இவற்றைவிட பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள அலங்கார பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு மக்கள் சென்று மலரஞ்சலி செலுத்தினர்

யாழ். செயலக ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நல்லூரில் நேற்றைய உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நல்லூரில் இன்று நடைபெறும் நிகழ்வில் வர்த்தக ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குடாநாட்டின் முக்கிய சந்திகள் மற்றும் வீதிகளில் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. திலீபனின் கருத்துக்களைக் கொண்ட பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. எங்கும் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

திலீபன் நினைவாக கலை நிகழ்ச்சிகள் பாடசாலை மாணவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

கோட்ட ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரமதான நிகழ்வுகளிலும் நேற்றுப் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

(ஐ-15-17-155-173)

முச்சந்தி முரளி



மின்சாரத்தை தரப்போகினமாம் பிறகு பற்றறிகளை [illegible] பாருங்கோ...!

நித்திரையில் தட்டி எழுப்பி டாக்டர் வீட்டில் கொள்ளை

ஆனைக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 17

வீட்டு விறாந்தையில் நித்திரையில் இருந்தவரைத் தட்டி எழுப்பி "காவல்துறையில் இருந்து வந்துள்ளோம் வீட்டை சோதிக்கப்போகின்றோம்" எனக்கூறிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று வீட்டுக்காரரை கிறிஸ் கத்தியால் குத்தியும் [illegible] தாக்கியும் விட்டு பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை பிடுங்கி எடுத்துக் கொண்டு தலைமறைவாகியது.

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் உள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் நேற்று அதிகாலை 12 30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளைக் கோஷ்டியினர் நடத்திய தாக்குதலினால் டாக்டர் உட்பட அவரது குடும்பத்தினர் நால்வர் காயமடைந்தனர்

புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்து ஆறுகால்மடத்தில் வைத்திய நிலையம் ஒன்றை நடத்தி வரும் ஆறுமுகம் பேரின்பநாதன், (வயது 49), அவரது மனைவியான நவமணி [வயது 48], பிள்ளைகளான சிவப்பிரியா [வயது 20]. அகிலன் [வயது 17] ஆகிய நால்வருமே காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் பற்றி டாக்டரான ஆறுமுகம் பேரின்பநாதன் தெரிவித்ததாவது:-

விறாந்தையில் உறங்கிக் கொண்டிருந்தவேளை இருவர் என்னைத் தட்டி எழுப்பினர். சத்தம் போடவேண்டாம் நாங்கள் காவல்துறையினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடருக்கு கோழிக் குஞ்சுகள் எடுத்துக்கொடுக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (32895)

இறைச்சிக்கோழிகள், மரக்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில்: [சி-9171]

ஆறரை அடி உயரமும் மூன்று அடி அகலமும்கொண்ட இரும்புச் சருக்குக் கேற்றும், சிறிய கட்டிலுக்குரிய ஆர்பிக்கோ குசன் மெத்தையும் விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 1c/3 கிராமணியார் வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம். [32910]

எல்லா வகையான Prima கோழித்தீன்கள் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்றர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் [32912]

ஜமுனாபாரி பால் ஆடுகள் Russian White வான்கோழிகள், கறுப்பு வான்கோழிகள், பண்டம் கோழிகள், அழகான பண்டம் கூடு விற்பனைக்கு உண்டு. காலை மாலை பார்வையிடலாம். நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [32914]

விற்பனையாகிறது

பாகுபாடு, பெயரீடு மற்றும் தாவரக் குடும்பங்கள் பேராசிரியர் ஆர். என். டி. பெரேரா, தாவரவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம். வெளியீடு: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்; [சி-9116]

புறொயிலர் விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்: (பஸ்தியன் சந்தி) [32809]

கோழிகள்

முட்டை இடும் லார்க் கோழிகள், கிராத்துக் குஞ்சுகள், ஒரு மாதம் நிரம்பிய கினிக்கோழிக் குஞ்சுகள், இறைச்சிக்குரிய கோழிகள் விற்பனைக்குண்டு கந்தசாமி அன் சன்ஸ், இல. 16, ஆடியபாத வீதி, நல்லூர். [32894]

புறொயிலர் குஞ்சு

Prima Broiler (பிறிமா புறொயிலர்) ஐந்து நாள் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32872)

இறைச்சிகோழி

எல்லாவகையான இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம் நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் [32913]

ஆனந்தம் தயாரிப்புகள்

சத்-சித் ஆனந்தம் சதமாக இருக்கும் உண்மை பொருளை எமது சித்தத்தால் அறிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதைபோல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம் பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள். கேட்டுவாங்குங்கள் ஆனந்தம். [சி-9036]

SCIENCE CENTRE

எழிலகம் முன்
யாழ்ப்பாணம்.

A/L 94

கணித உயிரியல்
பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரிய வகுப்பு

★ எமது வழமையான ஆசிரியர் குழு!

ஆரம்பம்:
18 09 1994
ஞாயிறு 8-00 a m

நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

(சி-9132)

மனித உயிரியல்-I

கே. டி. அருட்பிரகாசம், கலா. என். ஏ. ஜயதிலக விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9158]

O/L MATHS

ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் சகல Sectionகளும் Portionகளும் நிறைவேற்றப்பட்டு Section and Portion Revison உடன் Past Papers Practiceம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. [7918]

ஆண்டு - 7 கணிதம்

ஆண்டு 7 கணிதம் உதயன் வெளியீடு: யாழ். நகரின் எல்லாப் பொத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். [32905]

கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்.

A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class)

புதிய பிரிவு
ஆரம்பம்;

எமது வழமையான
ஆசிரியர் குழு

குறிப்பு:
மாணவர்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

- நிர்வாகி

(சி-9178)

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

அராலி மத்தி
நிலாவெளி விளையாட்டுக் கழகத்தால்

11-09-94 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் புதிய துவிச்சக்கர வண்டியை பரிசாக பெறும்

✻ அதிர்ஷ்ட இலக்கம் **1651**

— நிர்வாகம்

(32907)

MATHS CENTRE

NFLLIADY

A/L 94 பரீட்சை எடுத்த மாணவருக்கான வகுப்புக்கள்

தூய பிரயோக கணிதம்:
திரு. அருளானந்தம்
19-09-1994 திங்கள் 8 a m

இரசாயனவியல்:
திரு. மணியம்
19 - 09 - 1994 திங்கள் 9-30a m.

★ அச்சடித்த குறிப்புக்கள் வழங்கப்படும்.

[32916]

புலிகளின் குரல் வானொலி நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டிகள் பற்றிய

அறிவித்தல்

"புலிகளின் குரல்" வானொலி ஆரம்பித்து 1994 — 11 — 21 உடன் நான்காம் ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி பின்வரும் போட்டிகள் நடத்தப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் ஒலிபரப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களின் ஆக்கங்களை 31 — 10 — 1994 க்குப் பிந்தாமல் "புலிகளின் குரல்", யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. வானொலி நாடகப் பிரதி

வானொலி நாடகப் பிரதி ஆகக்கூடியது 20 நிமிடங்களுக்குள் ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும். பிரதிகள் எழுத்துத்தாளில் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் 12 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. சிறுகதை

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதனவாகவும் பிரசுரிக்கப்படாதனவாகவும் இருத்தல் வேண்டும். 4 பக்கங்களுக்குக் குறையாமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. கவிதை

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக் கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பு நேரம் 5 நிமிடங்களுக்கு குறையாமலும் 10 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும். ஆக்கங்கள் தமது சுயமுயற்சியில் எழுதப்பட்டதென்றும் இதற்கு முன் ஒலிபரப்பவோ அல்லது வேறெவ்வகையிலும் வெளிவரவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும் படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும். ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும் விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

புலிகளின் குரல்,
தமிழீழம்.

[சி 9129]

தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ. இல: 21 / 94
தன்மை: மணவிலக்கு

வழக்காளி: மாரிமுத்து ஞானசேகரம்,
விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

எதிர்,

எதிராளி: ஞானசேகரம் கிருஸ்ணலீலா
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

இந்த 1994-ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24-08-94 ஆம் திகதி வழக்காளியின் சட்டவாளர் திரு. அ. இனியவனால் தெரியப்படுத்துவதாவது.

மேற்குறித்த வழக்காளி எதிராளிக்கு எதிராக தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சியில் அவரது சட்டவாளர் அ. இனியவன் மூலமாக ஒரு மணவிலக்கு வழக்கினை இம்மன்றில் தாக்கல் செய்துள்ளார். எனவே இவ்வழக்கில் எதிராளியோ அல்லது அக்கறையுள்ள எவரேனும் இருப்பின் இப் பத்திரிகையில் விளம்பரம் செய்த நாளில் இருந்து 14 நாட்களுக்குள் இம்மன்றில் தோன்றி தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கும் படியும் தவறும் பட்சத்தில் எதிராளிக்கு எதிராக ஒருமுக விளக்கம் நடைபெறும் என்றும் தெரியப்படுத்துகின்றார்.

"நீதிமன்றக் கட்டளைப்படி"

- வழக்காளியின் சட்டவாளர்,

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

[3290 8]

KEEN

திருநெல்வேலி

A/L DAY CLASS

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரிய வகுப்பு)

பொருளியல் — எஸ். வரதராஜன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — வரதன்
அளவையியல் — எஸ். எல். மனோகரன்
தமிழ் — பாலா
புவியியல் — சேரன்
இந்துநாகரீகம் — காரை. எஸ். [illegible]

ஆரம்பம்: 20-09-1994
செவ்வாய் காலை 8 a m.

[சி-9167]

இலங்கையின் முதல் புனிதராகி எமக்கு ஆசீர் அருளும்
ஆசாரத்துக்குரிய

யோசவ் வாஸ்

அடிகளாரின்
வாழ்க்கை வரலாறு பணிகளின்

கண்காட்சி - பொம்மலாட்டம்

இடம்: யாழ். மறைக் கல்வி நிலையம் (ஆயர் இல்லம்)

காலம்: **17 - 09 - 1994**
இன்று காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

கலை நிகழ்ச்சி

நாட்டுக்கூத்து
(தென் மோடி ஆட்டக்கூத்து)

இடம்: மரியன்னை பேராலய கலை அரங்கு

காலம்: **17 - 09 - 1994** இன்று மாலை 6-30 மணி

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்

வாழ்த்துவோர்:

◎ சில்லாலை பங்கு மக்கள்

◎ லைடன் புடைவை நிலையம் (தீவகம்)

◎ நகர மருந்தகம் சிற்றி மெடிக்கல்ஸ்

◎ நியூ வசந்தா களஞ்சியம்

[32918]

உ

சைவ பரிபாலன சபை • யாழ்ப்பாணம்

சைவ நெறித் தேர்வு - 1993 அகில இலங்கை பரிசளிப்பு விழா

காலம்: **18 - 09 - 1994** மு.ப. 9 மணி
இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம் (நீராவியடி)
தலைவர்: திரு. இ. மகேந்திரன் (தலைவர் சைவ பரிபாலன சபை யாழ்ப்பாணம்)

நிகழ்ச்சி நிரல்

திருமுறை ஓதுதல்:
கல்லூரி மாணவர்கள்

மங்கள விளக்கேற்றல்:
சிவநெறிப்புரவலர் க. கனகராசா

அருளுரை வழங்கல்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்

வரவேற்புரை:
திரு. கா. கணேசதாசன் (உபசெயலாளர்)

பிரதம விருந்தினர் உரை:
செல்வி தி. பெரியதம்பி
(கல்விப் பணிப்பாளர் — வலயம் - 1)

சிறப்பு விருந்தினருரை:
திருமதி ம. எஸ். ஸ்கந்தராஜா
(அதிபர் யா / வேம்படி மகளிர் கல்லூரி)
திரு. நாக. சண்முகநாதபிள்ளை
(அதிபர் யா / மத்திய கல்லூரி)
திரு. பொ அருணகிரிநாதன்
(அதிபர் யா / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்)

சிறப்பு விரிவுரை:
கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை
(விரிவுரையாளர் ஆசிரிய பயிற்சி கலாசாலை கோப்பாய்)

விடயம் **"சமய வாழ்வு"**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கா. கணேசதாசன்; (உபசெயலாளர்)
வ. கந்தசாமி, (தேர்வு செயலாளர்)

வாழ்த்துவோர்:

ஸ்ரீ தாமோதரவிலாஸ்
237, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கலா அழகுக் களஞ்சியம்
65, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்;

கணேசானந்தா
பல்பொருள் விற்பனை நிலையம்
472 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-9135]

உதயன்
292/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

பாராட்டுதலை தளமாக்காதீர்

கடந்த மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் தகவல் ஒலிபரப்புத்துறை ராஜாங்க அமைச்சராகப் பணிபுரிந்தவர் திரு. ஏ. ஜே. ரணசிங்கா.

கலைத்துறையில் ஈடுபாடுள்ள இவர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவாளர்; அபிமானி. பிரேமதாசா பிரதமராக இருந்த காலத்தில், ''ரவர் ஹோம் பவுண்டேசன்'' என்ற நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். 1989 தேர்தலில் பிரேமதாசா ஜனாதிபதியான போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அபேட்சகர் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு நுழைந்தவர். ராஜாங்க அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட கால உறுப்பினர் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஏ.ஜே. ரணசிங்கா, ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் பல சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிட்டுப் பரபரப்பு ஏற்படுத்தியவர்.

விஜேதுங்கா ஜனாதிபதியான பின்னர், இவர் ராஜாங்க அமைச்சராக இருந்த அனுபவித்த பல அதிகாரங்களை இழந்து வெறும் நடைப்பிணமாகச் செயற்பட நேர்ந்தது. அதனால் அப்போது, தனது சொந்தக் கட்சி (ஐ. தே. க.) அரசையும் பிரமுகர்களில் பலரையும் வெளிப்படையாகக் கண்டித்தவர். சில சந்தர்ப்பங்களில் சர்ச்சைக்குரிய விடயங்களை மட்டுமன்றி, முன்னுக்குப் பின் முரணாகவும் கருத்துக்களை கக்கி வந்தார்.

இறுதியில் விளைவாக நடந்த ஒகஸ்ட் தேர்தலில் இவர் ஐ. தே. க. மேலிடத்தினால் ''கழித்து'' வைக்கப்பட்டார். வேட்பாளர் நியமனம் வழங்கப்படவில்லை.

இவ்வாறான பின்னணி கொண்ட ஏ.ஜே.ஆர்., நாடு இன்று இனப்பிரச்சினையால் சீரழிவதற்கு முந்திய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே காரணம் என்று சாடியுள்ளார். முன்னைய ஆட்சியாளர்களும், பௌத்த குருமாரும் குறுகிய நோக்கத்துடன் செயற்பட்டு, சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை வழங்காததாலேயே நாடு இந்தளவு சேதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்கப் பிரதமருக்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழர் பிரச்சினை நீதியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று தாம் நாடாளுமன்றத்தில் முன்னர் வலியுறுத்தியதாகவும் திரு. ரணசிங்கா நினைவுபடுத்துகிறார்.

இனப்பிரச்சினை இந்தளவு பூதாகாரமாகி, சீரழிவுகள் இடம்பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அவற்றை ஆட்படுத்தித் தம் வசமாக்கியுள்ள பௌத்த பிக்குமாரும், பேரினவாத சக்திகளுமே காரணம் என்பது தெரிந்ததே.

ஆயினும், அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருந்த போது இதனை எடுத்துக் கூறி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமாறு வற்புறுத்தக் கூடிய வல்லமை இல்லாதிருந்த ஏ. ஜே. ஆர் போன்றவர்கள் இப்போது கண்டனம் தெரிவிப்பதாலோ, குற்றம் சுமத்துவதாலோ பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டை ஆண்ட தலைவர்கள் எல்லோரையும் விட, மிகவும் வேறுபட்ட வகையில், முற்போக்கான சிந்தனையுள்ளவராக இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் புதிய பிரதமர் சந்திரிகா அக்கறையாக உள்ளார்.

அவரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து அவருக்கு ஆதரவு திரட்டிக்கொடுக்க ஏ.ஜே.ஆர் மற்றும்றொனிடிமெல் போன்றவர்கள் உழைக்கவேண்டும். சந்திரிகாவைப்பாராட்டி, அவரது அணிக்குள் சேர்ந்துகொள்வதற்கான அத்திவாரமாக, அவருக்குச் சார்பான கருத்துக்களை கூறும்உத்தியைப் பயன்படுத்தலாகாது.

தமிழ் மாநிலத்துக்கு அதிகாரங்கள்
அதற்கமைய அரசமைப்பில் திருத்தம்

இந்திய ராஜதந்திரி கருத்து

கொழும்பு, செப். 17
பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் தொடர்பு சாதனங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை தமிழ் மாநிலத்துக்கு வழங்கக் கூடியதாக இலங்கை அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும். இது விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும்.

இவ்வாறு இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரும் லண்டனில் இந்தியாவின் தூதராகப் பணியாற்றியவருமான குல்திப்நய்யார் 'த ஐஜண்ட்'' பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

''யாழ்ப்பாணத்துக்கு 370 ஆவது ஷரத்து''— என்ற தலைப்பிலான அக்கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்திய அரசமைப்பில் உள்ள 370ஆவது ஷரத்து, பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் தொடர்பு சாதனங்கள் தவிர்ந்த ஏனைய விஷயங்கள் குறித்த அதிகாரங்களை ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்குகின்றது. ஆனால் இந்த ஷரத்தை சொல்லுக்கு சொல், உணர்வுபூர்வமாக அமுல் நடத்துவதில் இந்திய அரசு தோல்வி கண்டது. ஜம்மு—காஷ்மீர் சட்டசபை ஊடாக மத்திய அரசு தனது அதிகாரங்களை அம்மாநிலத்தில் பயன்படுத்துகின்றது.

அம்மாநிலத்தி' தேர்தல்களில் மோசடி செய்து, மத்திய அரசு தாம்விரும்பியவரை முதலமைச்சராக்க முடிந்தது.

நாம் விட்ட தவறுகளில் இருந்து விடுதலைப்புலிகள் பாடம் படிக்க முடியும். கூடுதல் அரசமைப்பு உத்தரவாதங்களை விடுதலைப்புலிகள் கோரமுடியும்.

உதாரணத்துக்கு அரசமைப்பு வரையறையை மீறி மத்திய அரசு நடப்பது குறித்து மாநில அரசு முறையிடுவதற்காக உயர் நீதிபதிகள் அடங்கிய நிலையான ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி கோரலாம்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் மோசடிகள் இடம்பெறும் என்ற கேள்வி எழாது. இன்று காஷ்மீர் மக்கள் தங்கள் உரிமைகள் குறித்து காட்டும் அக்கறைபோன்று யாழ்ப்பாண மக்களும் தங்கள் உரிமைகள் குறித்து அக்கறையாக உள்ளனர்.

இந்திய எதிர்ப்பு உணர்வு தமக்கில்லை என்று சந்திரிகா சமீபத்தில்தான் கூறியுள்ளார்.

ஆனால் இலங்கை அரசியலில் இந்தியாவைத் தூற்றுபவர்கள் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி இவர்களைப் பயன்படுத்தியது.

பேரினவாதியான ஜே ஆர்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவே பதவியிலிருந்தபோது, குறுகிய உணர்வுகளில் இருந்து விடுபட்ட — பண்பட்ட அரசியல்வாதி போலன்றி சிங்களப் பேரினவாதிபோன்று நடந்துகொண்டார்.

சந்திரிகா பதவிக்கு வந்த பின்னர் தான் ஜெயவர்த்தனா இலங்கை மீது இந்தியா கைவைக்கக் கூடாது என்றார்.

இந்தியாவின் கரங்கள் கறைபடிந்தவை என்ற ஜெயவர்த்தனாவின் குற்றச்சாட்டு மறந்து போய்க் கூறியதொன்றல்ல. காலம் பிந்தி புதுடில்லி சரியான அணுகுமுறையை கடைப்பிடிக்கிறது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர் இந்தியாவின் நடவடிக்கையில் களங்கமில்லை.

துரதிஷ்டவசமாக இந்தியாவின் தூதர்கள் சிலர் வைசிராய்களாக நடந்து கொண்டனர். அதனால் இந்தியாவுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. நல்ல காலம், அவர்கள் எல்லாரும் ஓய்வு பெற்று விட்டார்கள்.

புதுடில்லியின் நிலைப்பாடு குறித்து சந்திரிகா கவலைப்படத் தேவையில்லை. தாம் விட்ட தவறுகளுக்காக இந்தியா அனுபவித்து விட்டது.

வடபகுதியில் விடாது நடக்கும் ஆயுத மோதல் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் அனுதாபத்தைக் கிளறிவிடும்: ஆகவே சந்திரிகாவின் சமாதான நடவடிக்கையை வரவேற்கின்றோம்.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

வாகனங்கள், ஆடம்பரப் பொருள்களுக்கு
பலகோடி ரூபா தீர்வை அறவிடாமல் வரிவிலக்கு!
ஜனாதிபதி டி. பியின் சிபார்சில்

கொழும்பு, செப். 17
கடந்த ஐ. தே. க. அரசின் கீழ் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி விஜேதுங்கா, இறக்குமதி செய்யப்பட்ட கார்கள், வாகனங்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கு பல கோடி ரூபா தீர்வையை அறவிடாமல் வரிவிலக்கு அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுங்கத் திணைக்களச் சட்டத்தின் கீழ் சுங்கத் தீர்வையில் இருந்து விலக்கு அளிக்கும் அதிகாரம் நிதி அமைச்சருக்கே உண்டு;

பஜேரோ மற்றும் வாகனங்களை இறக்குமதி செய்த சிலருக்கு 10 லட்சம் ரூபா வரை தீர்வை வசூலிக்கப்படாமல் விலக்கு அளிக்கப்பட்டது.

உல்லாசப்படகு ஒன்றை இறக்குமதி செய்த ஒருவருக்கு 86 லட்சத்து 26 ஆயிரத்து 785 ரூபா தீர்வை விதி விலக்களிக்கப்பட்டது.

இத் தீர்வை ரத்து பற்றிய தகவல்கள் கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி வெளியான விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது. (ஓ-எ)

பருத்தித்துறை துறைமுகம் மற்றும்
அகதி முகாம்களுக்கு சிமெந்து கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், செப். 17
யாழ் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்கள் மற்றும் பருத்தித்துறை துறைமுக புனரமைப்பு வேலைகளுக்காக 3 ஆயிரம் மூடைச் சிமெந்து வரவிருக்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இந்த சிமெந்தை கப்பல் மூலம் இங்கு அனுப்ப ஏற்பாடு செய்து வருவதாக யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

யாழ். செயலகப் புனர்வாழ்வு பிரிவு இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தது.

போரினால் பாதிப்படைந்த
அரச ஊழியருக்கு நஷ்டஈடு; அஷ்ரப் துரித நடவடிக்கை
யாழ். அரச அதிபரிடம் காசோலைகள்

கொழும்பு செப் 17
போரின் விளைவாக வீடுகள் மற்றும் சொத்துகள் சேதமடைந்த பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் நஷ்டஈடு கோரி செய்திருந்த விண்ணப்பங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் துரிதமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

முதற் கட்டமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 50 அரச ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகைக்கான காசோலைகள் கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பினால் யாழ் அரச அதிபரிடம் கொழும்பில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளன. (ஓ-ஐ)

கற்றாளை இலையிலிருந்து கயிறு திரிக்க முடியும்!

யாழ்ப்பாணம், செப். 17
கற்றாளை இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கயிற்றையும் இது தயாரிக்கப்படும் முறை பற்றியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் நல்லூர் கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

கயிறு தட்டுப்பாடான இக்காலத்தில் பல்வேறு பொருள்களிலிருந்தும் கயிற்றைத் தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சியின் ஒரு நடவடிக்கையாகவே இத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

கற்றாளை பல்வேறு தரைகளிலும் வளரக்கூடிய தாவரமாகும். வரட்சியான இடங்களிலும் இது பெரியளவில் காணப்படுகின்றது. இக் கற்றாளை இலையிலிருந்து கயிறு செய்வதை ஆர்வமுடையவர்கள் ஒரு சிறு தொழிலாக கூட செய்யமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு காமினி தயாராகிறார்

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னோடியாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டச் செயற்குழுத் தலைவர்கள், உறுப்பினர்களைச் சந்திப்பதில் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை கண்டி மாவட்ட ஐ தே க. செயற்குழு உறுப்பினர்களை காமினி திஸநாயக்கா சந்தித்துப் பேசினார். (ஓ-எ-6)

வாகனங்களில் அரச சின்னம்

அரச வாகனங்களில் அரச சின்னங்கள் கட்டாயமாகப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சு, அமைச்சுச் செயலாளர்களுக்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது. (ஓ 6)

புலிகளின் குரல் வானொலியில்

17 — 09 — 1994
சனி இரவு
- ★ 8-01 — தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ஏழுமலை எழுதிய ''தியாக தீபம் திலீபன்''
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40— சிறப்பு நிகழ்ச்சி- லெப். கேணல் ஜஸ்ரின் நினைவாக ஈழநாதன் குழுவினர் வழங்கும் வில்லிசை

18 — 09 — 1994
ஞாயிறு காலை
- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15— களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30—செய்திகள்
- ★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தியாகதீபம் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ஞானரதன்

பாலர் பாடசாலை ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், செப். 17
யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டுடன் வளர்ந்தோர் கல்விப் பிரிவு, பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு நடத்தும் சேவைக் காலக் கருத்தரங்கு, பயிற்சி வகுப்புகள்— கோப்பாய் பிரதேச செயலகம் பிரிவில் உள்ளவர்களுக்கு இன்று சனிக்கிழமை கோப்பாய் மகா வித்தியாலயத்திலும்—

தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் உள்ளவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை யூனியன் கல்லூரியிலும் — பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் உள்ளவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை வேலாயுதம் ம. வியிலும்—நடைபெற உள்ளன. (அ)

புள்ளியிடும் பரீட்சகர்கள்

1994 க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு புள்ளியிடும் பரீட்சகர்களாக சேவை புரிய விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை வலயங்களிலிருக்கும் மாதிரிப்படிவத்திற்கமைய உரிய முறையில் பூரணப்படுத்தி அதிபரூடாக எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் தங்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கும்படி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 17
யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் வருடாவருடம் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தும் பயிற்சி வகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (ஐ - 3 - 20)

சுவாமி விபுலானந்தரைக் கவர்ந்த பாரதியின் விடுதலைப் பாடல்கள்!

விழாவில் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம் செப்.17
''சுதந்திர உணர்வை ஊட்டிய பாரதியின் பாடல்கள் துறவியான விபுலானந்தரைக் கூடக்கவர்ந்தன விபுலானந்தர்.இந்தியாவில் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த போது பாரதி பாடல்களைப் பாடப்புத்தகமாகக் கொண்டு செய்தார்.''

யாழ்ப்பாணக் கல்லூரியின் மகாகவி பாரதி விழா முதல் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

முதல் நாள்விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் நிறுவனத்தின் குலேந்திரன் அரங்கில் நடைபெற்றது.

பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது;

'சுவாமி விபுலானந்தர் தாயின் மணிக்கொடி பாரீர் என்ற பாடலுக்கேற்ப தமது விடுதியின் முன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். பாரதி பாடல்களே அவருக்கு இச்சிந்தனையைத் தந்தன.''

விழாவில் ''பாரதி ஒரு பன்முகப் பார்வை'' என்ற தலைப்பில் க[illegible] இடம் பெற்றன.

இக்கருத்தரங்[illegible] யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராஜா பேசும் போது கூறியதாவது:-

''சமூக விடுதலை பெண் விடுதலை போன்றவற்றையும் பாரதியார் வலியுறுத்தத் தவறவில்லை. ஆயுதம் செய்வோம் என்று முதன்முதல் பாடிய பாரதி காகிதம் செய்வோம் என்று கூறி தொழிற் புரட்சிக்கு கவிதை இலக்கியத்தினூடாக வித்திட்டார். அவரின் பாடல்களை அடியொற்றியே இன்று கவிதைகள் புனையப் படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

சம்பல் [illegible] அமைப்பாளர் [illegible] ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

திலீபன் நினைவாக
இன்று நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி திலீபன் நினைவாக இன்று 17ஆம் திகதி பல்வேறு வட்டங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொது அமைப்புகளும் நிறுவனங்களும் வருமாறு;

பருத்தித்துறையில் மந்திகை அம்மன் கோயிலடி.

கரவெட்டியில் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோயிலில் சயன்ஸ் சென்ரர் (தனியார் கல்வி நிலையம், கரவெட்டி தெ. ப. பொ. கூ. ச.

உடுப்பிட்டியில் நாவலடி வைரவர் கோயிலில்: உடுப்பிட்டி வர்த்தகர் சங்கம், வீரகத்தி ச. ச. நிலையம், ஜீவகன் ச. ச நிலையம், உதயசூரியன் ச. ச. நிலையம், உடுப். நகர் ச. ச. நிலையம், இராசலிங்கம் ச. ச நிலையம்.

உடுவிலில்; அளவெட்டி மல்லாகம் வர்த்தகர் சங்கம், தையல் பயிற்சி நிலையம், கோணற்புல முகாம், நீதிமன்ற முகாம்.

சங்கானையில்: பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச.

சண்டிலிப்பாயில்: ஆனைக்கோட்டை இடம்பெயர்ந்த மக்கள்.

கோப்பாயில்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நாவலர் வித்தியாலயம், இருபாலை சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை, கோப்பாய் கந்தவேள் வித்தியாலயம், நீர்வேலி ப. நோ. கூ. ச., சர்வோதயம், கோப்பாய் மாதர் சங்கம், ச. ச. நிலையங்கள்.

தீவகக் கோட்டத்தில்; பா. ப. நோ.கூ.. ச., செம்மா தெரு ஸ்ரீயன் குடியிருப்பு, தீவகக் கடல் தொழிலாளர் ஒன்றியம்.

தென்மராட்சியில்: கைதடி, நாவற்குழி பக்கி வீதி மக்கள்;

சாவகச்சேரியில்: சரசாலை, மட்டுவில், மட்டுவில்—நுணாவில், ப. நோ. கூ. ச. தெ. ப. பொ. கூ. சங்க ஊழியர்கள்.

கொடிகாமத்தில்; கலைமகள் ச. ச. நிலையம், பாரதி ச.ச. நிலையம், சரஸ்வதி ச. ச நிலையம் ஜஸ்மின் ச. ச. நிலையம்.

பளையில்; இத்தாவில் செல்லபுரம் மக்கள், ப.நோ. கூ.ச. (ஐ)

அனுமதியின்றி பனை தறித்தவரிடம் குற்றப்பணம் அறவிடப்பட்டது!

அனுமதியின்றி பனை மரம் தறித்தவரிடம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குற்றப்பணம் அறவிட்டதோடு, தறித்த பனை மரங்களையும் பறிமுதல் செய்தது.

வலிகாமம் ஈவினை பகுதியில் ஒருவர் தனது வளவில் உள்ள 32 பனை மரங்களை உரும்பிராயில் உள்ள ஒருவருக்கு விற்றிருந்தார்; அவர் பனை மரம் தறிப்பதற்கான அனுமதி பத்திரமின்றி தறித்தார். அவரிடமிருந்துபனைஒன்றிற்கு ஆயிரம் ரூபா விதம் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் பனை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டசம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

தமிழீழத்தின் இயற்கை வளமான பனைமரங்கள் கண்டபடி தறிக்கப்படுவதை கட்டுப்படுத்துமுகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அனுமதி எடுக்கப்படல் வேண்டும் எனவும் இவ்வாறு அனுமதியின்றி தறிக்கப்படும் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா விதம் அபராதம் விதிக்கப்படும் எனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ)

வலி. மேற்கு வேலைவாய்ப்பு தகவல் திரட்டும் பிரிவு

அராலி, செப். 17
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பு தகவல் திரட்டும் பிரிவு, தகவல் திரட்டும் படிவங்களை விநியோகம்செய்து தகவல்களை திரட்ட ஆரம்பித்துள்ளது.

தினமும் இரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு என்ற அடிப்படையில் படிவங்கள் வழங்கும் வேலை நடைபெறவுள்ளதாகவும்—

கிராம சேவை உத்தியோகத்தர் இலக்க ஒழுங்கு அடிப்படையில் விநியோகம் நடைபெறும் என்றும்—

விண்ணப்பதாரர் தத்தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமக்குரிய படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும்— தெரிவிக்கப்பட்டது: (இ-12)

புதிய வீதி அமைப்பு

தியாகி திலீபனின் நினைவு நாளை ஒட்டி அச்செழு வடக்கு மற்றும் சிறுப்பிட்டி மேற்கு ஆகிய பகுதிகளை இணைக்கும் புதிய வீதி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வலி மேற்கு பகுதியில் வீதி விளக்குகள் அமைப்பு

வலி. மேற்கு பிரதேசசபை, அதன் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளை அமைத்துக் கொடுத்து வருகிறது.

இது வரை 34 வீதி விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. விளக்குகளுக்கான மண்ணெண்ணெய் செலவை சில பொது நிறுவனங்களும் தனியாரும் ஏற்றுள்ளனர். (க-12)

நல்லூர் லயன்ஸ் கிளப்பின் முன்மாதிரி பின்பற்றத்தக்கது

ஜெய்ப்பூர் நிறுவன வைபவத்தில் உரை

கால் கைகளை இழந்துள்ள வறிய மக்களுக்கு இலவசமாக அந்த அவயவங்களை வழங்கியுள்ள நல்லூர் லயன்ஸ் கிளப்பின் முன்மாதிரியை ஏனைய பொது அமைப்புகளும் பின்பற்ற வேண்டும்.

ஜெய்ப்பூர் நிறுவன இட்டப் பணிப்பாளர் திருமதி திலகவதி யோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாத இறுதியில் நல்லூர் லயன்ஸ் கிளப்சார்பில் நால்வருக்கு செயற்கைக் கால்கள் வழங்கப்பட்ட வைபவம் கண்டிக்குளி ஜெய்ப்பூர் நிறுவன முன்றலில் நடைபெற்றது.

நல்லூர் லயன்ஸ் கிளப்தலைவர் திரு. லயன் கே. துரைராசா தலைமையில் நடைபெற்ற வைபவத்தின் போது திருமதி திலகவதி யோகநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

'1987 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கை கால் நிறுவனம் இதுவரை 1084 கால்களையும், 80 கைகளையும் உற்பத்தி செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியுள்ளது.''

திரு. லயன் கே. துரைராசா தமது தலைமை உரையில் கூறியதாவது;

ஜெய்ப்பூர் நிறுவனம் இங்கே அமைந்து இத்தகைய பணியைச் செய்து கொண்டிருப்பது எமது வடபகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது— என்றார்.

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த 69வயதான திரு. யோசெப் டேவிட், சுழிபுரம் காட்டுப் புலத்தைச் சேர்ந்த 22 வயதான வைரவன் மனோகரராசா, பொன்னாலை கிருஷ்ணர் கோயிலடியைச் சேர்ந்த 49 வயதான பெருமாள் செல்வராசா, சுழிபுரம் பறாளை வீதியைச் சேர்ந்த முருகையா வசந்தகுமாரி (வயது 26) ஆகியோர் செயற்கைக் கால்களை நல்லூர் லயன் கழகத்திடமிருந்து இலவசமாக பெற்றுக் கொண்டனர். (க-51)

**சூழல் பேணின்
வாழ்வு நீளும்**

முக்கிய அறிவித்தல்

விசேட பொதுக் கூட்டம்
வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்
(கோப்பாய் வட்ட பிரிவு)

இன்று (17-09-1994) சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் வட்டப் பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்கும்; உறுப்புரிமை பெறாத புதிய வர்த்தகர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் ஒன்று பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிப்பதற்காக நடைபெறவுள்ளது. அனைத்து வர்த்தகர்களும் தங்கள் குடும்ப அட்டை, வருமானவரித்துறை பதிவு சான்றிதழ் என்பவற்றுடன் தவறாது வருகை தருமாறு அன்புடன் வேண்டுகோள்கின்றோம்.

ரீ. எஸ். சண்முகரத்தினசர்மா,
செயலாளர்.

தா. சிவானந்தன்,
தலைவர்.

(32911)

NEW SCIENCE ACADEMY
எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

94 A/L
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்க்குரியது
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 18-9-94 ஞாயிறு

Zoology	திரு. தம்பிராஜா 8-00 — 9-00
Physics	திரு. கணேசன் 10-00 — 11-00
Chemistry	திரு மணியம் 11-00 — 12-00
Pu/App Maths	திரு. வெக்டர் 12-00 — 2-00
Botany	திரு. குணசீலன் 12-00 — 1-00
Pu/App Maths	திரு குணசிங்கம் 4-00 — 6-00

(சி-9118)

எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை

- ★ தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை
- ★ வியாதியஸ்தர்களை அழைத்து வாருங்கள்
- ★ யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கப்படும்

புரட்டாதி 17ஆம், 18ஆம் திகதி
சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில்
காலை 9-00மணிக்கு

எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை
21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரசங்கிப்பவர்கள்:
சகோதரன் ஜெபஸ்ரின்
சகோதரி: விக்டோறியா ஜெபஸ்ரின்

(32908)

சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ், றோட்டரக்ற் கழகம்
எஸ், எம், பெர்னாண்டோ நிறுவன
ஆதரவில் நடத்தும்
சைக்கிள் ஓட்டப் போட்டி 18 — 09 — 1994
ஞாயிறு காலை மத்திய கல்லூரிக்கு
அண்மையில் ஆரம்பமாகவுள்ளது.

— றோட்டரக்ற் கழகத்தினர்,

[சி-9137]

வலிமேற்கு பிரதேச வணிகர் கழகம்
சங்கானை

முக்கிய அறிவித்தல்

மண்ணையும் மக்களையும் நேசித்து தன்னை உருக்கிய மாவீரன் தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் உண்ணா நோன்பு நாளை (18 - 09 - 1994) வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதால், அனைத்து அங்கத்தவர்களும் காலை 7.00 மணியிலிருந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

தலைவர்
வலி. மேற்குப் பிரதேச வணிகர் கழகம்.

(32923)

SIXTH DEATH ANNIVERSARY
IN LOVING MEMORY
OF



WINSLOW SUKIRTHARATNAM
(Rtd Irrigation Engineer)

Entered in to Glory On 17 - 09 - 1988

"Safe in the Arms of Jesus"
Just a Heart beat away
Darling Daddy

Fondly remembered
by your loving Children
and their Families

S. C VASANTHAKUMAR,
"Ratna Green"
Uduvil.

[7643]

முதலாம் ஆண்டு நினைவு தினம்

சி. பவானி

சி. நிரஞ்சனி

சி. பிரபாகினி

த. சுசீலா

அன்னை மடியில்:
01 - 03 - 1972 02 - 11 - 1979 09 - 11 - 1983 12 - 10 - 1973
அன்புச் செல்வங்களின் அநியாய அழிப்பு: 28 - 09 - 1993
திதி: 17-09-1994

"அன்புச் செல்வங்களே! எம் நெஞ்சில் அணையாத தீபங்களே!
இன்சொல் பேசி எங்களை இறும்பூதெய்த வைத்தீர்களே!
ஈவிரக்கம் இல்லாத ஈனர்கள் உங்களை இடித்து எடுத்தார்களே
உங்களை நினைத்து நாங்கள் ஊனைய் உருகித் துடிக்கின்றோம்.

கரம்பொன் கிழக்கு, காளிகாகிலடி, ஊர்காவற்றுறை திரு திருமதி சின்னராசா ஆகிய எங்களது அன்புச் செல்வங்கள் பவானி, நிரஞ்சனி, பிரபாகினி, மருமகள் சுசீலா ஆகியோர் சாவகச்சேரி, சங்கத்தானையில் 28-09-1993 இல் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சிற்கு இரையாகி ஓராண்டு நினைவு தினத்தில் அன்புச் செல்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாசத்தால் துடிக்கும்!
[illegible]

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

கலந்துரையாடல்

யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் கலைச்சாரநிலையத்தின் ஆதரவில் உதைபந்தாட்ட விதிகள் பற்றிய விரிவுரைகளையும்—

விதிகளின் புதிய திருத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினையும் — இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியில் நடத்த உள்ளது.

பாடசாலைகளின் உதைபந்தாட்டப் பயிற்றுநர்கள், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்கள், சங்க உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

யுத்தத்தை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடித்து காலத்தை நாம் கடத்தப்போவதில்லை. வருடக் கணக்கில் இதற்காக அரசு செலவிடாது. நியாயமான கோரிக்கைகளை நியாயமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அரசு தயாராக உள்ளது. —என்று சிப்பாய்களிடம் கூறினார். [அ-எ-6]

வடக்கு...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை பல வருடங்களுக்கு நீடிக்கும் உத்தேசமும் இல்லை என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ தடை முகாம்களுக்கு விஜயம் செய்த பிரதி அமைச்சருக்கு, வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது என்று ரூபவாஹினி தெரிவித்தது.

நித்திரையில்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டைச் சோதனையிடப் போகிறோம் என்று அவர்கள் கூறினர்; சற்றுத்தள்ளி வேறு மூவர் நின்று கொண்டிருந்தனர். தலையில் தொப்பி அணிந்திருந்த இவர்கள் வாயை துணியால் கட்டியிருந்தனர்.

அவர்களில் ஒருவர் மனைவியின் கழுத்தில் இருந்த சங்கிலியை திடீரென அறுத்து எடுத்தார்.

அதனையடுத்து நாம் அனைவரும் எழுந்து அவர்களை பிடிக்க முயல என்னை ஒருவர் திடீரென தாக்கினார் வேறு இருவர் எனது மனைவியையும் மகனையும் தாக்கினர். சுமார் 10 நிமிட நேரம் மாறி மாறி நாம் தாக்கப்பட்டோம். பின்னர் திருடர்கள் ஐவரும் தப்பி விட்டனர்.

இப்படி அவர் கூறினார்.

மூன்று கிறீஸ் கத்திகள் 2 சோடி செருப்பு, ரோர்ச் லைற் ஆகியவற்றை திருடர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர். [ஐ-15]

SCIENCE COLLEGE
பெருமாள்கோயில் வீதி
யாழ்ப்பாணம்

94 A/L கணித உயிரியல்
பரீட்சைக்கு
தோற்றியவர்களுக்குரிய
வகுப்பு
எமது வழமையான
ஆசிரியர் குழு
ஆரம்பம்:
18 09-1994
ஞாயிறு 8-00 a m.
(நேர அட்டவணையை
நிறுவனத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.)

[சி-9133]

MILKWHITE
V.M.K
SOAP
JAFFNA
மில்க்வைற்

வல்லிபுரக் கோயில்
வீதியிலே
ஞாயிறன்று தேரோடும்,
மில்கவைற் உற்பத்திகள்
அங்கே விற்பனைக்குக்
கிடைக்கும்.
மில்க்வைற்
மேலுறை
வெற்றுப்பக்கற்றுகளுக்கு
பரிசுகள்
ரூபா. 50க்கு மேல்
கடன் கொள்வனவுக்கு
அன்பளிப்பு ஒரு கஜு
மரக்கன்றும். "ஹரி
ஓம்" மட்டையும்!
"மில்க்வைற்"
வாகனத்தை நாடுங்கள்
-மில்க்வைற்.

(இ-9136)

பொருண்மிய கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 17 நல்லூரில் இடம்பெற்று வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கண்காட்சி 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இக்கண்காட்சியை பார்வையிட்டு பயன்பெறுவதற்கு வசதியாகவே கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நீடிக்கப்பட்டுள்ள இந்த ஒருவார காலத்திலும் காலை 10 மணி முதல் பகல் 1 மணி வரையுமே கண்காட்சியைப் பார்வையிட முடியும். அதுவும் பார்வையிட விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தாவடி முதன்மைச் செயலகத்தில் தொடர்பு கொண்டு முன் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 17 யாழ்ப்பாணம் வை.எம்.சி. ஏயினால் நடத்தப்படும் வருடாந்த அங்கத்தவர் உள்ளக விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான பூப்பந்தப் போட்டிகள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இன்று சனி காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

ஆண்களுக்கான போட்டிகள் எதிர்வரும் திங்கள் காலை 9 மணிக்கு பரியோவான் கல்லூரியில் ஆரம்பமாகும்.

முகமாலைக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப் 17 முகமாலை ஆரோக்கிய மாதா திருநாளை முன்னிட்டு இன்று 17 ஆம் திகதியும் நாளை 18 ஆம் திகதியும் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை வரை விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

மரண அறிவித்தல்கள்

செல்வன் தருமலிங்கம் நிசாந்

கோண்டாவிலைச் சேர்ந்த தருமலிங்கம் (தற்போது சுவிஸ்) இளவாலையைச் சேர்ந்த கலாநிதி (தற்போது சுவிஸ்) ஆகியோரின் அன்பு மகன் நிசாந் 14-9-94 அன்று சுவிஸில் காலமானார்.

இவர் கோண்டாவில் இராசையா - சரஸ்வதி தம்பதியின் மற்றும் இளவாலை சுப்பிரமணியம் - அற்புதராணி தம்பதிகளின் அன்புப்பேரனுமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மா. இராசையா குடும்பம்
சி. சுப்பிரமணியம் குடும்பம்

M. S. வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(32919)

திருமதி மீனாட்சிப்பிள்ளை சுப்பையா

துணவி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மீனாட்சிப்பிள்ளை சுப்பையா காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பையாவின் (பொலிஸ் அதிகாரி) அன்பு மனைவியும் ராசமணி, செல்வம், கந்தசாமி, அன்னலட்சுமி, மகாலட்சுமி, சந்திரகுமார் ஆகியோரின் தாயாரும், சிவஞானம், குமாரதாஸ், சிவலோகநாதன், மகாலிங்கசிவம், சிவலோகநாயகி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 17 9.94 சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
ந. சந்திரகுமார்
(மகன்)

துணவி,
வட்டுக்கோட்டை.

(32920)

கந்தையா கனகசபாபதி

மந்தைக்கைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபாபதி மலேசியாவில் காலமானார்

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி த. செல்லம்மா, திரு சி. செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகவல்
செ. செல்வராஜா
(நாதன)

நந்தாவில்,
கொக்குவில்.

(32924)

கந்தையா இராசையா

புத்தூர் சந்தி, மீசாலையைப் பிறப்பிடமாகவும், பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா காலமானார்.

இவர் அமரர் சந்தசாமி [கோ ஜுவலர்ஸ்] அவர்களின் தந்தையாரும், அற்புதராணி அவர்களின் மாமனும், சுஜாதா, ஜீவகாந்தன், ஜீவகீதா, வெனிசா, கோமகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தகவல்:
க. ஜீவகாந்தன்
[பேரன்]

கோ ஜீவலர்ஸ்,
சாவகச்சேரி

[32925]

சின்னப்பு திருநாவுக்கரசு
(இளைப்பாறிய பிரதம சிறைச்சாலை
உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம)

உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு திருநாவுக்கரசு காலமானார்.

இவர் சரஸ்வதி அம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினம், காலஞ்சென்ற நடராசா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், புஸ்பகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இ. ஜெகதீசன்
[யாழ். பல்கலைக்கழகம்]
ச. சற்குணமூர்த்தி
[யாழ். மாநகரசபை]
[பெறாமக்கள்]

"குமாரவாசம்"
டச்சு வீதி,
உடுவில்.

[32926]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/3 இல் அமைந்துள்ள அச்சகத்தில் 17 - 09 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.